மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# மதுரைக்காஞ்சியில் இயற்கை குறித்த வெளிப்பாடுகளும் இன்றைய மலேசிய மரபுகவிதைகளில் இயற்கை குறித்த வெளிப்பாடுகளும்

# Revelations About Nature in Maduraikkanchi and Revelations About Nature in Today's Poetry

இரோஷன் இராஜ் செல்வராஜன்/ Roshaan Raj Selvarajan[1]
[1]Undergraduate Student, Faculty of Languages and Communication, Sultan Idris Education University
Corresponding Email: roshaan00.rr@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

பத்துப்பாட்டில் ஒரு பகுதியான மதுரைக்காஞ்சியிலும் இன்றைய கவிதைகளில் காணப்படும் இயற்கை குறித்த வெளிப்பாடுகளையும் செய்திகளையும் கண்டறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இந்த ஆய்வில், மதுரைக்காஞ்சி பாடல்களும் இன்றைய கவிதைகளும் முதற்நிலைத்தரவுகளாகவும், ஆய்வாளர்களின் கூற்றுகள் இரண்டாம் நிலை தரவுகளாகவும் அமைகிறது. பண்டையச்சமூகம் கையாண்ட இயற்கையின் மகத்துவத்தையும் இன்றைய இயற்கை சூழலில் வெளிப்படும் கவிதைகள் மூலமாகவும் தெரியவந்தது. காலம் காலமாய் போற்றி வந்த இயற்கையின் அழகினையும் செழிப்பையும் அதனோடு இன்றைய இயற்கையின் நிலையையும் அறிய உதவுகிறது.அதுமட்டுமின்றி, பண்டையத்தமிழர்கள் இயற்கையைக் கையாண்ட முறைகளையும் இயற்கையைப் பேணி வந்த செய்திகளும் தெரியவந்துள்ளது. இயற்கைவழி மக்களின் செல்வாக்கும் ஐவகை நிலத்தைச் சார்ந்து வாழ்ந்த செய்தியும் காணமுடிகிறது.அன்றைய கால இயற்கையும் இன்றைய கவிதைகளில் காணப்படும் இயற்கையும் அதன் மாற்றத்தையும் முன்னிறுத்தி இந்த ஆய்வு கட்டுரை விளக்குகிறது.

**கருச்சொற்கள்:** மதுரைக்காஞ்சி, இயற்கை, வெளிப்பாடு

**Abstract**

The purpose of this article is to find out the assent, expression, appearance, and messages about nature that found in Madurai Kanchi and in today's poetry, Madurai Kanchi which is a part of the ten songs that called Pattupattu. In this study, the poems of Madurai Kanchi and today's poems which used form of primary data while the researchers form as secondary data. The importance of nature handled by the ancient society was also revealed through the poems that emerge in today's natural environment compared with the late nature beauty in Madurai Kanchi. It helps us to understand the beauty and prosperity of nature, which has been cherished for ages, as well as the state of nature today. The influence of the nature and the fact that they lived on five kinds of land can be seen in this paper, highlighting the nature of that time and the nature changing in today's poetry.

**Keywords:** Madurai Kanchi, nature, expression

**முன்னுரை**

சங்கத்தமிழ் காலத்தில் பல தரப்பட்ட இலக்கியங்கள் கிடைக்கப்பெற்றாலும், அதீதச்செய்தி கொண்ட பத்துப்பாட்டு எனும் தொகுப்புத் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சியில் மேலோங்கி நிற்கிறது. பத்துப்பாட்டு எனும் தொகுப்பில் அடங்குவது மதுரைக்காட்சி. பாண்டிய மன்னனின் காலத்து மதுரை நகரம் குறித்த தகவல்களையும் காட்சிகளையும் பாடல்கள் மூலமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. மதுரைக்காஞ்சியின் மூலமாகவே பண்டையத்தமிழர்களின் வாழ்வும் வளமும் நெறியும் கொடையும் ஆகிய அத்தனைச் செய்திகளும் மதுரைக்காஞ்சியில் இடம்பெற்றுள்ள பாடல்கள் மூலமாக அறிந்து கொள்ளலாம் மதுரைக்காஞ்சியில் இயற்கை குறித்த செய்திகள் அனைத்தும் அதிக வானியல் சிந்தனைகளையும் கொண்டுள்ளது. இயற்கை அழகும் அதன் இயல்பும் அறிய முடிகிறது.விஞ்ஞானத்துறையில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப வளர்ச்சியால் இன்று வானியல் ஆய்வு முன்னேற்றம் கண்டுள்ளது(ஞா. செல்வி,2018). இப்படி இயற்கை வானியல் சிந்தனைகளோடு மதுரைக்காஞ்சியில் அமைந்திருக்கிறது. இக்காலத்து இயற்கையின் மாற்றங்களை நிறைய இலக்கியங்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. மதுரைக்காஞ்சியில் இயற்கை குறித்த வெளிப்பாடுகளையும் இன்றைய கவிதைகளில் இயற்கை குறித்த வெளிப்பாடுகளையும் இவ்வாய்வுக் கட்டுரை ஆராய்கின்றது.

**ஆய்வுக் கண்டுபிடிப்பு**

**கடல் வளம் குறித்த வெளிப்பாடு**

மதுரைக்காஞ்சி ஐந்திணை வளங்களையும் பெற்றது. அதில் முக்கியமாகக் கடல்சார் வெளிப்பாடுகள் அதிகமாகவே காணப்பட்டுள்ளது. மதுரைக்காஞ்சியில் நெய்தல் நிலம் குறித்த செய்தி காணப்பட்டுள்ளது. கடல் சார்ந்த நிலம்தான் நெய்தல். மீன்பிடித் தொழிலையே மையமாக வாழ்ந்து வந்த நெய்தநில மக்கள் இயல்பாகவே கடலைப் பாதுகாத்து அதன் இயல்பினை மதித்து வந்தார்கள். கடல் வழி கிடைக்கும் முத்து, பரதவர் தரும் பொருட்கள், உப்பு, மீன் போன்ற அத்தனை வணிகப் பொருள்களும் நிறைந்த செய்திகளைப் மதுரைக்காஞ்சி பாடல்கள் புலப்படுத்துகின்றன.

முழங்கு கடல் தந்த விளங்கு கதிர் முத்தம்
அரம் போழ்ந்து அறுத்த கண்ணேர் இலங்கு வளை,
பரதவர் தந்த பல்வேறு கூலம்,
இருங்கழி செறுவின் தீம்பளி
(மது.கா. 315-324)

இந்த மதுரைக்காஞ்சியின் வரிகளே இதற்குச் சான்று. இப்படி பல்வேறு வணிகத்தில் ஈடுபட்டிருந்தனர். காலம் கடந்து இந்நிலைமாறி உலகளாவிய நிலையில் கடலைச் சார்ந்து பல்வேறு வணிகங்கள் மேலும் வளர்ந்து அது காலப்போக்கில் கடலுக்கே அமைதி இழக்கச்

செய்துவிட்டது. வணிகம் உயர உயர அதன் தாக்கமும் கூடவே உயர்வதைக் காணமுடிகிறது. உதாரணத்திற்கு, மதுரைக்காஞ்சியின் பாடல் வரியில் முழங்கு கடல், முத்து, சங்கு, பரதவர் தரும் பொருள்கள், உப்பு, தீம்புளி போன்ற மனிதர்களின் அடிப்படைத் தேவைக்காகக் கடலைப் பயன்படுத்திய சமூகமாகப் பண்டையச்சமூகம் வாழ்ந்து வந்தது. நிலமும், பொழுதுகளும், இயற்கையும் பின்னணியாகக் கொண்ட மனித வாழ்வு மேம்பட புனைவது இலக்கியம் என்கிறார் முனைவர் அ. இந்துமதி (tamilauthor, 2009) இப்படி இயற்கையை மதித்து தேவைக்கேற்ப பயன்படுத்தி பண்டையச்சமூகம் வாழ்ந்து வந்ததைத் தெளிவுப்படுத்துகிறது. அதுவே, இன்றைய சூழலில் மக்களின் கடல் பயன்பாடு அதிகமாகி இயற்கைக்கு மாறாக நிறைய எரிபொருள்கள் கடல்வழியே நமக்குக் கிடைக்கப்பெறுகிறது. கடலின் இன்றைய நிலையை இன்றைய கவிதையின் மூலமாக நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

உடல் வெந்து அலையும் மனிதரைப் பார்த்து
கடல்வந்து சொல்லும் கருத்துள்ள பாட்டு
அல்லும் பகலும் அலைகின்ற அலையை உடைய கடலேநான்;
அள்ளி யள்ளிக் கொடுக்கின்றேன்;
ஆழ்கடல் அமைதி காக்கிறேன்
வெள்ளிப் பணத்து வேட்டையிலே ,
விலங்கினும் தாழ்வாய்ப் போனவனே!
சொல்லும் பார்ப்போம் உம்மனதில் துளியும் அமைதி இருப்பதுண்டோ?
இயர்கையின் இதய ஓசை!,
(கவித்தூறல் கவிதைத் தொகுப்பு, பக் 171)

என்கிறார் கவிஞர் திருமாமணி. கவிஞர் இக்கவிதையில் கடல் பேசுவதைப் போல சித்திரித்துள்ளார். மனிதனின் கடல் ஆட்சியை எதிர்த்துக் கேட்பதுபோல் அக்கவிதை அமைகிறது. மதுரைக்காஞ்சியில் வெளிப்பட்ட செய்தியை ஒப்பிட்டு பார்த்தால் பண்டைய மனிதர்கள் கடலைத் தேவைக்கேற்ப வளத்துடனும் அதனைப் பராமரித்து வந்த செய்தி இருக்கின்றது. நாளடைவில் அந்த வணிகத்தின் தாக்கமே இப்பொழுது உலகளவில் மனிதர்களால் கடலின் நிலை மாறி சரிந்துள்ளது.

**மழை குறித்த வெளிப்பாடு**

மதுரைக்காஞ்சியில் நகரம் அலைவீசும் பரப்பினைச் சூழ்ந்த கடல் வளத்துடன் நிரம்பி இருக்கின்றதை நம்மால் காணமுடிகிறது. அதற்கு மூலாதாரம் மழையே ஆகும். ஆகவே, மதுரைக்காஞ்சியில் ஐவகை நில வளங்களும் மழையினால் சிறப்படைந்து அதனால் சிறந்த மன்னன் ஆட்சியும் வணிகமும் இணைந்தே சிறந்தது எனலாம். இதற்கு அடிப்படை மழையாகதான் அமைந்தது. இயற்கை செவ்வனே இயங்குவதற்குப் பண்டைய மக்கள்

இயற்கைக்கு மாறாக செயல்களைப் புரியவில்லை. அதன் காரணத்தினாலேயே அக்கால மனிதருக்கு இயற்கை உதவியது.

மை தீர்ந்து கிளர்ந்து விளங்க
மழைதொழில் உதவ மாதிரங் கொழுக்கத்
(மது.கா. 1-13)

என்ற மதுரைக்காஞ்சியின் பாட்டின் மூலம் அறிந்து கொள்ளலாம். இப்பாட்டின் இயற்கை அதன் இயல்பு மாறாமல் மனிதனுக்குத் தேவையான அனைத்தையும் பூர்த்தி செய்யும் வண்ணம் சித்திரிக்கப்பட்டுள்ளது .இதில் 'மழைதொழில் உதவ மாதிரங் கொழுக்கத்' என்ற வரி, மழை பொழிய மாநிலமும் கொழுந்து உள்ளது என்று பொருள்படுகிறது. மனிதராய்ப் பிறந்த நாள் முதல் மனிதருக்கு முதல் பங்கினை ஆற்றுவது மழைதான். மழையை மையப்படுத்தியே மனிதனின் வாழ்வு நகர்ந்துள்ளது என்று பண்டைய காலச் சான்றுகளே போதுமானது.அது இன்றளவும் பயன்பாட்டில் நிலைத்து நிற்கிறது.முக்கியமாக ஒரு விதை விதைப்பதற்கு மழையே முக்கியப்பங்காற்றுகிறது. ஒரு நாடு தலைசிறந்த நாடாக உருவாகுவதற்கு அந்நாட்டின் விளைச்சலே பெரும் புள்ளியாக அமைகிறது. அதற்கு மழை கட்டாயம் அவசியம். இயற்கை குன்றாமல் இயற்கையைக் காத்து வந்தாலே தானாகவே மழை பெய்யும் என்பது நாம் அறிந்த ஒன்று. இதைத்தான் மதுரைக்காஞ்சியில் மழை குறித்த செய்தியும் அதன் பயன்களும் தெரிந்தது. இயற்கை அழகுடன் தேவைக்கேற்ப இயற்கையைப் பயன்படுத்தி இயற்கையைப் பண்டையச் சமூகம் காப்பாற்றியுள்ளனர் என்று நம்மால் அறிய முடிந்தது. காலப்போக்கில் இந்நிலை மாறி இயற்கையின் சமநிலையும் மாறி பல இடங்களில் மழை பெய்யாமல் இருக்கின்றது. மழை பெய்யாத காரணத்தினால் சுற்றுச்சூழலின் மேன்மையும் சிறப்பும் குறைகிறது. சில இடங்களில் மனிதர்களின் பண புழக்கத்தின் விளைவாகவும் உலகத்தில் மழை பொழிவது குறைவாகத்தான் அமைகிறது. உதாரணத்திற்கு காடுகளை அழிப்பது,தண்ணீரை ஓட விடாமல் அணைக்கட்டுவது போன்றவையாகும். இந்த நிலையை இன்றுள்ள கவிதைகளில் காணலாம்.

வான்மழையே! வான்மழையே!
வான் தாண்டி வந்திடுக!
வான்வெளியே! வான் வெளியே!
வான்மழையைத் தந்திடுக!
காடொன்று எரிகிறதே!
கார்மேகமே காணலையோ?
வீடென்றே நம்பி நின்ற
விலங்குகுரல் கேட்டிலையோ?
(வானம் பொழியட்டும், கவித்தூறல் கவிதைத் தொகுப்பு, பக் 321)

என்கிறார் கவிஞர் சரவணன் இராமச்சந்திரன். இந்தக் கவிதையிலிருந்து இன்றைய சூழ்நிலையில் மழை பொழிவதே அரிது என்ற செய்தியைக் காண முடிகிறது. மனிதனின் செயல்களே இயற்கையை அழித்து மழை பொழிவதைத் தடுக்கின்றன என்பதை

இக்கவிதைக் காட்டுகிறது. காடெல்லாம் அழித்துப் பணம் ஈட்டும் மனிதர்களின் செயலே இதற்கு மூல காரணமாக விளைகிறது. மதுரைக்காஞ்சியில் மனிதர்களின் அத்தியாவசியத் தேவைக்கு ஏற்றார்வாறு இயற்கையைப் பயன்படுத்தி அதற்குத் தீங்கு செய்யாமல் இயற்கையை அதன் இயல்போடு இருக்கச்செய்தார்கள். ஆனால், இன்று காட்டை அழித்துக் காட்டையும் மழையையும் நம்பியிருக்கும் விலங்குகளுக்குக் கூட அதன் இயல்போடு வாழ வழி செய்யவில்லை. மழையின் மகத்துவத்தை மதுரைக்காஞ்சியில் காணமுடிகின்றது. பொங்கிய அலைவீசும் பரப்பினைக் கொண்டது கடல் என்ற செய்தியே நல்ல மழை வளம் கொண்ட காலம் என்பதை உணர முடிகிறது. ஆனால், இன்று அறிவியலோடும் அதன் வளத்துடனும் செயற்கை மழை உருவாக்கி அனுபவிக்கும் நிலை மாறிவிட்டது.

**நிறைவுரை**

உலகம் மாற்றம் அடைந்ததற்கு இயற்கையின் மாற்றங்களும் வைத்து நாம் அறிந்து கொள்ளலாம். மதுரைக்காஞ்சியில் வெளிப்பட்ட இயற்கையின் வளத்தையும் இன்றைய காலத்தில் நிறைந்திருக்கும் இயற்கையின் மாறுதலையும் காணமுடிகிறது. இயற்கையின் மாற்றத்திற்கு மனிதர்களின் செயல்தான் முதன்மைக் காரணமாக இருக்கின்றது.வாழ்க்கைக்கு தேவையான இயற்கையின் அளவைப் பயன்படுத்தாமல் தொழில் நுட்பத்தின் வளர்ச்சியாளும் வியாபார நோக்கத்தினாலும் இன்றைய காலத்தில் இயற்கை சீரழிந்திப்பதையும் கண்கூடாகப் பார்க்க இயலுகிறது.புவியியல் அடிப்படையில் அமைந்த மக்களின் வாழ்வும் வசதிகளுக்கும் இயற்கையே முதன்மை திறனாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.சங்கக் காலத்தில் வெளிவந்த இயற்கையின் மகத்துவத்தை தொடர்ந்து பாதுகாக்க வேண்டும் என்ற செய்தி தெள்ளத்தெளிவாக காட்டுகிறது. இயற்கையின் மாற்றம் இன்றைய காலத்தில் அனைவருக்கும் துன்பத்தையே ஏற்படுத்துகிறது என்பதையும் அறிய முடிந்தது. மதுரைக்காஞ்சியில் வெளிப்பட்ட இயற்கையை அதன் இயல்போடு திரும்ப வைத்தால் நன்மை பயக்கும் என்பது முடிந்த முடிபாகும்.

**துணைநூற்பட்டியல்**


அ.இந்துமதி,உதவிப்பேராசிரியர்,(2009),மதுரைக்காஞ்சியும்ஐந்திணை வளங்களும்,

அ.ஸ்ரீதேவி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,(நவம்பர் 2020),குறிஞ்சி,முல்லை நிலப் பொது மக்களின் புற வாழ்க்கை,நேரு கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்-641105.

இந்துதமிழ்திசைச்செய்தி:https://www.hindutamil.in/news/supplements/uyir-moochi/678846-drainage-areas-to-help-restore-rivers.html

க.துரியானந்தம்,(2015),திருமுறைகளில் இயற்கை வருணணை,தமிழ்ப்பேராய்வு ஆய்விதழ்,மலாயாப் பல்கலைக்கழகம்,மலேசியா.

ச. அருண்வெங்கடேஷ், (ஜூன் 2021),பேராற்றின் ஒவ்வொரு பகுதியையும் காப்போம்: ஆறுகளை மீட்க உதவும் நீர் வடியும் பகுதிகள்!,

சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி.

ஞா.செல்வி,(ஏப்ரல் 2018),மதுரைக்காஞ்சியில் வானியல் சிந்தனை,தமிழாய்வுச் சங்கமம்,பன்னாட்டு ஆய்விதழ்,தமிழ் உயராய்வு மையம் தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி.

மனோன்மணி தேவி அண்ணாமலை, சரசுவதி உலகன், திசம்பர்2020, கவித்தூறல் மலேசியத் தமிழ்க் கவிதைத் தொகுப்பு, உமா பதிப்பகம், Percetakan Advanco.SDN.BHD.

மு. பழனியப்பன்,இணைப்பேராசிரியர்,தமிழாய்வுத் துறை,(ஜனவரி 2021),மதுரைக்காஞ்சி உணர்த்தும் அறச் சூழலும் அறங்களும்,மா. மன்னர் கல்லூரி, புதுக்கோட்டை.

முத்துலட்சுமி,விரிவுரையாளர்,(2019),தமிழ் இலக்கியங்களில் இயற்கை,கேரளாப் பல்கலைக்கழகம்.

முனைவர் பா.சக்திவேல்,(நவம்பர் 2019),தினமணிச்செய்தி,நெடியோன்: